PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com

## "கர்மயோகம்"

கர்மயோகமென்பது, "ஜீவன் - பரமாத்மா" இவர்களைப் பற்றிய உண்மைகளை சாத்திர மூலம் உணர்ந்து, பிறகு பலனில் பற்று இல்லாமல் செய்யும் காம்ய கர்மங்கள், நித்ய நைமித்திககர்மங்கள் ஆகியவைகளோடு, கட்டுப்பாட்டுடன் செயலாற்றுவதாகக் கொண்ட ஒரு நற்செயல். இது தபஸ் - தானம் - யாகம் என்று பலவகைப்படும்.

## "ஞானயோகம்"

கர்மயோகத்தை சரிவர செய்து, அதனால் மனதை தன் வசப்படுத்திய ஒருவன், எம்பெருமானுக்குச் சரீரமான ஜீவாத்ம (தனது) ஸ்வருபத்தை இடைவிடாது சிந்தித்தலேயாகும்.

இவையிரண்டும் வரப்பெற்றவர்கள், ஆச்சார்யார்கள், சாத்வீகர்கள் முதலானார்களோடு நெருங்கிப் பழகும் போது, இறைவனிடம் உண்டாகும் அன்பு, அவனை இன்னும் தெளிவாய் அறியவே வண்டும் என்ற பேரன்பாக (காதல்) வளரும். இந்தப் பேரன்பே "பக்தி" எனப்படும். இந்த பேரன்பினால் தன் ஆன்மாவையும் காணப்பெறுகிறான். பிறகு முழுமையான பகவதனுபவத்தைப் பெறவிரும்பி பக்தியோகத்தை அனுஷ்டிக்கிறான். இது "பரபக்தி" எனப்படும்.

இந்நிலையில், எப்படி ஒரு நாயகி நாயகனின் பிரிவால் ஏங்கித் தவிப்பாளோ, அதே நிலையை அடைந்து, எம்பெருமானைக் காணவேண்டும் என்று நெஞ்சம் பதறும். இத்தகைய பக்தனுக்கு இறைவன் தன்னை கொஞ்சம் கொஞ்சமாய் காட்டிக் கொடுத்தும் - மறைந்தும் அவனது பக்தியை தூண்டுவான் இந்த நிலை பக்தனிடம் "**பரஜ்ஞானத்தை**" வளர்க்கும். இது தியான வடிவமானது.

பக்தியோகம் "**அஷ்டாங்க யோகம்**" என்றும் கூறப்படும்.

இயமம் - நியமம் - ஆசனம் - பிராணயாமம் - பிரத்தியாகாரம் - தாரணை - தியானம் என்ற ஏழு அங்கங்களோடு "சமாதி" என்ற அங்கியையும் சேர்த்து எட்டும் அஷ்டாங்கயோகமெனப்படும்.

<u>இமயம்</u>: வாய்மை, பற்றுதலில்லாமை, பிரும்மசர்யம், அஹிம்சை, திருடாமை ஆகிய ஐந்து இயல்புகள் கொண்டது.

<u>நியமம்</u>: தினமும் வேதம் ஓதுதல், புறத்தூய்மை, அகத்தூய்மை,

PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com



உடலை வருத்தும் விரதம் - தவம், இறையுணர்வு ஆகிய ஐந்து இயல்புகள் கொண்டது.

__ஆசனம்__: மனத்தை ஒரு முகப்படுத்தி தியானத்தில் அமரும் நிலை.

__பிராணாயாமம்__: மூச்சுக்காற்றை உள்ளிழுப்பதான "பூரகம்", காற்றை வெளியேற்றுவதான "ரேசகம்", உடலிற்குள்ளேயே காற்றை நிறுத்திக் கொள்ளுதலான "கும்பகம்" ஆகிய மூன்றையும் நிலைப்படுத்தி சரீரத்திலுள்ள ஐந்து பிராணன்களையும் வசப்படுத்துவதாகும். **பிராணன் - அபானன் வ்யானன் - உதானன் - சமானன்** என்பவை ஐந்து பிராணன்களாகும்.

__பிரத்தியாகாரம்__: ஐந்து புலன்களை கட்டுக்குள் வைப்பது.

__தாரணை__: மனதை சதா இறைவனிடம் லயிக்கச் செய்வது.

__தியானம்__: வேறு நினைவில்லாமல் இறைவனையே நினைப்பது.

இந்த ஏழு அங்கங்களையும் முறையாகப் பயின்றால், எட்டாவது நிலையான சமாதியை அடைய வழிபிறக்கும். இவைகளை செய்வது மிக கடினமானது. எண்ணெய் வார்க்கும் போது அதன் தாரை தொடர்ந்து விழுவது போல எம்பெருமானின் தியானம் தொடர்ந்து நிலை பெற வேண்டும்!

இவை தவிர வேறு வகையான ஏழு அங்கங்களையும் சிலர் குறிப்பிட்டுள்ளார்கள். அவைகள், **விவேகம் - விமோகம் அப்பியாசம் - கிரியை - கல்யாணம் - அனவசாதம் - அனுதர்ஷம்** எனப்படும்.

__விவேகம்__: இறைவன் உறையும் ஆலயமான சரீரத்திற்குள், கண்ட உணவுகளையும், சாப்பிடக் கூடாதவைகளையும் இட்டு திணிக்காமல், சத்துவகுணமேலோங்கும் உணவு வகைகளையே உட்கொண்டு ஆகார நியமனம் என்ற தூய்மை பெற வேண்டும்.

__விமோகம்__: உலகியல் பொருள்களைப் பற்ற இச்சை கொள்ளாது ஆசையற்று அகத்தூய்மை பெறுதல்.

__அப்பியாசம்__: இறைவனை நெஞ்சில் கொண்டு அவனது கல்யாண குணங்களில் ஈடுபாடு கொள்ளுதல்.

__கிரியை__: தினமும் மேற்கொள்ளும் பஞ்ச யக்ஞங்கள் இதில் அடங்கும். **"தேவயக்ஞம்"** என்ற இறைவன் வழிபாடு, **"பிரும்மயக்ஞம்"** என்ற வேதம் ஓதுதல், ஓதுவித்தல், **"பித்ருயக்ஞம்"** என்ற நீத்தார்கடன், **"மனுஷயக்ஞம்"** என்ற அதிதி உபசாரம்,

PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com
PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com



"பூதயக்ஞம்" என்ற உயிரினங்களுக்கு ஆகாரமிடுதல் என்ற ஐந்து செயல்களும் கிரியை எனப்படும்.

__கல்யாணம்:__ மனம் - வாக்கு - காயம் ஒன்றுபட்டு அஹிம்சை, கருணை, தானம், வாய்மை, பிறர் பொருள் விரும்பாமை ஆகிய நற்பண்புகள் அடையப் பெறுதல்.

__அனவசாதம்:__ துன்பங்களைக் கண்டு வருந்தாமல் அத்துன்பங்களை தாங்கும் பக்குவம் பெறுதல்.

__அனுதர்ஷம்:__ இன்பத்தைக் கண்டு தனது திருமேனியை அவ்வப்போது காட்டியும் மறைத்தும் உள்ள நிலையில், எப்பொழுதும் அவனைக் காணவேண்டும் என்ற ஒரு பேரானந்தம் உண்டாகும். இதுவே "பரமபக்தி" எனப்படும். எம்பெருமானை அனுபவித்தாலன்றி உயிர்தரிக்க முடியாத ஒரு ஆசையை உண்டாக்கும். இந்நிலையில் பிராட்டியோடு கூடிய எம்பெருமான் தனது பரிபூர்ணானுபவத்தைக் கொடுப்பதற்கு இசைவான். இந்த வகை பக்தனுக்கு முக்திநிச்சயம் உண்டு. மரண காலத்தில் இறைவனைப் பற்றிய நினைவு அந்திமஸ்ம்ருதி கட்டாயம் பக்தனுக்கு வந்தேயாக வேண்டும். சரீரம் விட்டதும் அந்திமஸ்ம்ருதியுடனேயே மோக்ஷலோகம் செல்கின்றான்!

இவ்வகையான பக்தி "சாதனபக்தி" எனப்படும். "சாத்தியபக்தி" என்ற மற்றொரு வகை, பகவானின் கருணை தானாகவே ஒருவர் மேல் லயிப்பது. இது மிக மிக அரிதான நிலை. மயர்வறமதி நலம் அருளப்பட்ட நம்மாழ்வாரே இதற்கு உதாரணமாக திகழ்கின்றார்.

### "சரணாகதி என்ற பிரபத்தி"

பிரபத்தி என்றால் சரணாகதி என்று பொருள். இதற்கு "பரந்யாசம் - பரசமர்ப்பணம் - உபாயாநுஷ்டானம்" என்று பல பெயர்களுண்டு.

சக்தியற்ற ஒருவன் தனக்கு வேண்டிய கார்யங்களை சாதித்துக் கொள்ள, அக்கார்யங்களை செய்து கொடுக்கும் தகுதி படைத்த ஒருவரை அணுகி, அவர் கோரியதைக் கொடுத்து தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்வதே சரணா கதியாகும். இவன் யாரிடம் உதவி கோரி செல்கிறானோ, அவனுக்கு இவன்கோரும் செயலைச் செய்து கொடுப்பதற்குள்ள சக்தியும்,

PDF-XCHANGE
Click to buy NOW!
www.docu-track.com



PDF-XCHANGE
Click to buy NOW!
www.docu-track.com

தகுதியும், நல்லெண்ணமும் இருத்தல் அவசியம். இல்லையேல் சரணாகதி தர்மம் பலிக்காமல் போகக் கூடும்.

ஒரு வேடன் பட்டினயினால் அவதியுற்று, இறுதியில் ஒரு முயல் குட்டியைப் பிடித்தான். தனது பசியைப் போக்கிக் கொள்ள முயல் குட்டியாவது கிடைத்ததே என்ற களிப்பில் இருந்த போது, தாய் முயல் வேடனின் காலில் வீழ்ந்து மன்றாடி கத்தித்துடித்தது. இதைக்கண்டு மனமிரங்கிய வேடன், குட்டியை விடுவித்து விட்டான். இக்கதையில், வேடனுக்கு சரணம் பற்றியவனை காப்பாற்ற வேண்டும் என்ற அறிவில்லை. முயலுக்கோ சரணாகதி செய்தால், அது பலிக்கும் என்று செயல்படுவதற்குள்ள அறிவாற்றல் இல்லாத பிராணி. ஆக சரணாகதி தர்மத்தின் பெருமையை அறிந்திராத நிலையில் சரணாகதி தர்மம் பலித்தது என்றால், ஞானானந்த மயனான எம்பெருமானிடம், ஞானச்ரயனான சேதனன் சரணாகதி செய்யும் போது, அது கட்டாயம் பலிதமாகத்தானே வேண்டும்.

சரணாகதி முறையான பிரபத்தியே பக்திமார்க்கத்தை விட சிறந்தது என்று வைணவம் கூறுவதற்கு காரணம் பிரபத்தி ஒரு எளிய வழிமட்டுமல்ல. அது பக்தியின் ஒரு அங்கம். கடினமார்க்கமான பக்தி கைவரப் பெறாத சேதனர்களுக்கு பிரபத்தியே முக்தி பெற சிறந்த சாதனம்.

இறைவனிடம், நான் வேறு கதி இல்லாதவன், வேறு ஒரு சாதனமும் இல்லாதவன். நீயே எனக்கு நல்ல பயனைக் கொடுத்துக் காப்பாற்ற வேண்டும் என்று முறையிடுவதே சரணாகதியாகும்.

ஆச்சார்யஸ்ரேஷ்டரான **"ஸ்ரீ ஆளவந்தார்"** தனது **"ஸ்தோத்திர ரத்னத்தில்"** எப்படிப்பட்டவன் சரணாகதன் என்று கூறியுள்ளார்.

> **"ந தர்ம நிஷ்டோஷ்மி ந சாத்மவேதி**
> **ந பக்திமாந் த்வத் சரணாரவிந்தே**
> **அகிஞ்ச னோ நன்யகதி ச் சரண்ய:**
> **த்வத் பாதமூலம் சரணம் பிரபத்யே"**

இதன் பொருள்: "நான் வேதங்கள் பயின்று ஓதியவனல்ல. நான் அநேக தர்மங்களை செய்த தர்ம நிஷ்டனல்ல, பக்தி செலுத்துபவனுமல்ல, கைமுதல் இல்லாதவன், சுறுங்கச் சொன்னால் அகிஞ்சனன், உனது திருவடிகளை தஞ்சமாகப் பற்றுகிறேன்".

இந்த நிலையிலுள்ள அனைவரும் ஸ்திரீகளுட்பட்ட எல்லா ஜாதியினரும் பிரபத்தியை செய்ய தகுதிபடைத்தவர்கள். பக்தி மார்க்கத்தைப் போல தகுதி வரையரைகள் கொண்டதல்ல பிரபத்தி மார்க்கம்.

சரணாகதியின் தத்துவத்தைப் பற்றி,

"சரணமாகும் தனதாளடைந்தார்க் கெல்லாம்
மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்"

என்று நம்மாழ்வாரின் அருளிச் செயலான திருவாய் மொழி பாசுரம், சரணமடைந்தவர்களுக்கு, இறைவன் முக்தி அளிக்கின்றான் என்று கூறுகிறது.

பிரபத்தி, "ஸ்வநிஷ்டை" - "உக்திநிஷ்டை" - "ஆச்சார்யநிஷ்டை" - "பாகவுத நிஷ்டை" என நான்கு வகைப்படும்.ஸ்வநிஷ்டை": ஞான அனுஷ்டானங்களில் சிறந்து, பிரபத்தியின் விதிகளை நன்கறிந்து ஒரு ஆச்சார்யாரை புருஷகாரமாக அடையாமல், தானே நேராக பகவானிடம் சரணமடைந்து பிரார்த்திப்பது.

<u>உக்தி நிஷ்டை</u>: ஆசார்யன் பிரபன்னர்களை, பகவான் முன்னிலையில் அழைத்துச் சென்று அவர்களுக்கு பிரபத்திக்கான வாக்கியங்களை உபதேசித்து, தம்மைக் காப்பதை இறைவன் பொறுப்பாகக் கொள்ள வேண்டுமென பிரார்த்திப்பது. இவ்வழியில் ஆசார்யானை முன்னிட்டே ஸ்வயமாக பிரார்த்திப்பதால் சிறப்பாக கருதப்படுகிறது.

<u>ஆசார்ய நிஷ்டை</u>: ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்த ஆசார்யன் எம்பெருமானிடம் செய்யும் சரணாகதியில் அடங்கியிருப்பது.

<u>பாகவத நிஷ்டை</u>: பூர்ண அதிகாரியான ஒரு பாகவதர் எம்பெருமானிடம் செய்யும் சரணாகதியில் அடங்கியிருப்பது.

ஐந்து அங்கங்களை கொண்டது சரணாகதி என்ற அங்கி.

<u>ஆநுகூல்ய சங்கல்பம்</u>: எம்பெருமானுக்குகந்த செயல்களை செய்து, அவனுக்கு அநுகூலமாகவே நடக்க உறுதி கொள்ளுதல்.

<u>ப்ராதிகூல்ய வர்ஜனம்</u>: எம்பெருமானின் திருவுள்ளத்திற்கு மாறாக நடக்காதிருத்தல். அதாவது, பிறர் மனம் நோகும்படி பேசாமலும், பிறர் பொருளை இச்சிக்காமலும் தீயோர் சேர்க்கையை வெறுத்தலும்; ஹிம்சை செய்யாதிருத்தலும் இப்படி இன்னும் அநேக அனுகூலமற்ற செயல்களை செய்யாதிருப்பது.

ACADE... ...T RESEARCH
ME... ...ARY
Acc. ... 18866
Date 26.9.94

PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com


<u>மஹாவிசுவாசம்</u>: பகவான், நிச்சயமாக தன்னை கரையேற்றி முக்தி அளிப்பான் என்ற திடநம்பிக்கை கொள்ளுதல்.

கணக்கற்ற பாபங்கள் செய்துள்ள நமக்கும் பலன் கிட்டுமா; முக்திக்கு தடையானவைகளை இறைவன் போக்கிவிடுவானா; அற்பமான செயலிற்கு இவ்வளவு பெரிய பதவியா; உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று தரம் பாராமல் எம்பெருமான் முக்தி அளிப்பானா; என்ற பல சந்தேகங்களை வளர்த்துக் கொண்டால், சரணாகதி தர்மம் பலிக்காமலும் போகலாம்.

கார்ப்பண்யம்: தன்னிடம் பக்தி யோகம் என்ற கைமுதல் இல்லாமையை அனுசரித்து பிரபத்தியின் காரணமாக முக்தி அடையப் போகிறோம் என்று கர்வம் கொள்ளாதிருப்பது. மேலும் எம்பெருமானுக்கு கிருபை உண்டாகுமாறு எப்பொழுதும் அடக்கமாக நிற்றல் ஆகியவைகளாகும்.

கோப்த்ருத்வ வரணம்: பத்தியோகம் முதலிய உபாயங்களை கடைப்பிடிக்க சக்தியற்ற தம் விஷயத்தில் அருள்பாவித்து, தோஷங்களை மன்னித்து, அவ்வுபாயங்களின் இடத்தில் நின்று தன்னை காப்பாற்ற வேண்டல்.

இந்த ஐந்து அங்கங்களும் சரணாகதி செய்யும் போது இருக்க வேண்டியது மிக அவசியம். இவற்றுள் ஒன்று குறைந்தாலும் அங்கியான சரணாகதி நிறைவேறாது. விபீஷணன், திரௌபதி, திரிஜடை ஆகியோர் செய்த சரணாகதியிலும் இவ்வைந்து அங்கங்களும் குறைவின்றி இருந்தன. உலகியல்பில் கூட ஒரு பொருளைக் காக்குமாறு ஒருவரிடம் ஒப்படைக்கும் போதும் இவ்வை வந்தும் இருப்பதைக் காணலாம்!

முற்கூறிய ஐந்து அங்கங்களும் மஹாவிசுவாசம் மிகவும் முக்கியமான அங்கமாகும். அதை பெறுவது மிகவும் அரிது.

எம்பெருமான் சர்வசக்திமான். சர்வஞ்ஞான், அளவற்ற அபராதங்களை செய்த சேதனனுகடு அணுகமுடியாதவன். ஆயினும், புருஷகாரமாக விளங்கும் பிராட்டியின் மறுக்கமுடியாத சொல்லால், சேதனனின் அபராதங்களையெல்லாம் மன்னித்துவிடுவானாதலின், நெருங்குவதற்கு எளியவனாகின்றான்.

கர்மத்திற்கு தக்க பலனையே அளிப்பவன் பகவான். சேதனன் மிகவும் அபராதியாயினும், அவன் செய்யும் சரணாகதிக்கு வசப்பட்டு, தனக்கும் சேதனனுக்கும் உள்ள தலைவன் - அடியன்

PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com



(சேஷி - சேஷன்) என்ற ஒழிக்க முடியாத உறவால், சேதனனுக்கு அளவற்ற பலனைத் தருவான்.

மற்ற தேவதாந்தரங்களைப் போல, இறைவன் எளிதில் பலன் தருவதில்லை. பொதுவாக பலன்களை தாமதித்து தருபவனாயினும், சரணாகதி செய்தவன் விஷயத்தில், தன் சங்கல்பமாத்திரத்தால் சேதனன் விரும்பும் காலத்திலேயே பலனை அளிப்பான்.

எம்பெருமான் ஒத்தாரும், மிக்காரும் இல்லாதவனாயினும், தன்னை சரண் அடைந்தோர்க்கு தரம் பார்க்காமல், தனது ஸ்வாதந்தர்யம் முதலான குணங்களால் சேதனனது பலனையே தனது பிரயோஜனமாகக் கொண்டு பலனை அளிக்கின்றான்.

எம்பெருமானால் பெறமுடியாதது என்று ஒன்றுமில்லை! மற்றவரது உபகாரத்தை எதிர்பாராதவன். இருப்பினும் தனது இயல்பால் சேதனன் செய்யும் சிறு தொண்டாற்றலையும் தனக்கு பரமோபகாரமாக கொண்டு பலன் அளிப்பவன்!

இந்த ஐந்து அர்த்தங்களையும் ஆசார்ய அனுக்ரஹத்தால் நன்கு தெளிந்தால் தான், மஹாவிசுவாசம் கை கூடும்!

முக்திக்காக மட்டும் செய்யும் சரணாகதிக்கு "சாத்வீக தியாகம்" (பலனில் பற்றை விடுகை) என்ற மற்றொரு அங்கமும், இன்றியமையாதது ஆகும்!

பிரபத்தி செய்வதற்கு அதிகாரி நிர்ணயம், கால நிர்ணயம், இட நிர்ணயம் என்ற வரம்பு இல்லை.

யானை மிகப்பலம் கொண்டதாயினும் தன்னாலேயே விடுவித்துக் கொள்ளமுடியும் என்ற முயற்சி தோல்வியுற்று, "ஆதிமூலமே" என்று குரலெழுப்பி சரணடைந்த பிறகு தான், அது விலங்கினத்தை சார்ந்ததாயினும், இறைவனால் காப்பாற்றப் பட்டது.

ஆதலால் தன்னைத்தானே காத்துக் கொள்ளும் தற்காப்பு வழிகளை கைவிட்டு எம்பெருமானே கதி என்ற நிலையில் தான் சரணாகதி பலிக்கும். சரணாகதி செய்வதற்கு முன்பு தன் இழிவான நிலையைக் கண்டு மனம் வருந்த வேண்டும். இல்லையேல் சரணாகதி பலிக்காமல் போகும். சரணாகதி செய்த பிறகு இப்படி மனம் வருந்தினால், எம்பெருமானின் வாக்கில் ஐயம் கொண்டவன் என்ற நிலையிலும் சரணாகதி பலிக்காமல் போகும். ஆதலின் சரணாகதி

PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com
PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com



செய்வதற்கு முன் வருந்தியும் பின் வருந்தாது மகிழ்ந்தும் இருப்பவனே செய்ய வேண்டியதை செய்து முடித்தவனாவான்.

சரணாகதி செய்தவனை பிரபன்னன் என்று கூறுவது வழக்கு.

பிரபன்னனுக்கு மரணம் நெருங்கும் போது அந்திமஸ்முருதி என்ற எம்பெருமானின் நினைவு வரவேண்டிய அவசியமில்லை!

பக்திக்கும் - பிரபத்திக்குமுள்ள சில ஒற்றுமைகளும், வேறுபாடுகளும்

ஒரு சேதனனுடைய நல்வினைகள் - தீவனைகள் பூர்வாகம் **உத்தராகம்** என்று இரு பிரிவாக உளது. இரண்டுமே சேதனனை கட்டுப்படுத்தப்படுபவைகளே! நல்வினை பொன் விலங்கு என்றால் தீவினை இரும்பு விலங்கு. சேதனின் சம்சார பந்தங்களுக்கு, இரண்டுக்கும் வேறுபாடு கிடையாது. இரண்டு வினைகளுமே பாபம் என்ற பொதுப் பெயரால் வழங்கும்.

பூர்வாகம் என்பது, ஒரு சேதனன் சரணாகதி செய்வதற்கு முன்பு, அனாதிகாலமாகத் தேடிய வினைகள். சரணாகதி செய்த பிறகு அறியாமலும், பழக்கதோஷத்தாலும் செய்யும் வினைகள் உத்தராகம் எனப்படும்.

பூர்வாகம் என்ற வினைகள் "சஞ்சிதம்" என்றும் பிராரப்தம்" என்றும் இருவகைப்படும்.

காலங்காலமாக சேதனன் செய்து மலைபோல குவிந்திருக்கும் வினைகளுள், குறிப்பிட்ட பிறவியில் சேதனன் அனுபவிப்பதற்காக வென்று இறைவனால் ஒதுக்கப்பட்டது. "பிராரப்தமாகும்", மலைபோல குவியலுள் எஞ்சியுள்ள வினைகள் "சங்சிதமாகும்".

பக்தியில் திளைத்தவனது சஞ்சிதம் முழுவதையும் இறைவன் போக்கி விடுகின்றான். பிராரப்தத்தை அப்பிறவியில் அனுபவித்தே தீர வேண்டும். பிராரப்தம் முழுவதும் அனுபவித்துத் தீர்க்கும் வரை பிறவியுண்டு. எந்தப் பிறப்பில் பிராரப்தம் முடிகின்றதோ, அப்பிறவியிலேயே உடல் பிரிகையில் எம்பெருமான் நினைவு வரும். உடனே முக்திப்பயணம் தொடங்கும்.

சரணாகதி செய்தவனான பிரபன்னனுக்கு பிராரப்தம் முழுவதும் அனுபவித்தே தீர வேண்டும் என்பதில்லை. சரணாகதி செய்த பின், மீதியுள்ள பிராரப்தத்தையும், சஞ்சிதத்தையும்

PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com



எம்பெருமான் போக்கிவிடுகிறான். ஆதனால் பிரபன்னனுக்கு சரணாகதி செய்த பிறவியிலேயே முக்தி உண்டு.

பிரபன்னர்களுள் "ஆர்த்தன்", "திருப்தன்" என இருவகையுண்டு.

சம்சாரபந்தத்தின் தளைகளில் வெறுப்புற்று, பகவத் விஷயங்களில் விருப்பம் கொண்டு, சரீரத்திற்குரிய பிராரப்தம் முடிவதற்கு முன்பே, முக்தியை விரும்பி சரணாகதி செய்பவர்கள் ஆர்த்தர்கள். இவர்கள் கோரியபடியே எம்பெருமான் முக்தியை அளிக்கின்றான்.

பகவத் கைங்கர்யங்களில் ஈடுபாடு கொண்டு, இந்த பிறப்பின் முடிவிலே முக்தி கிடைத்தால் போதும் என்று காத்திருக்கும் பிரபன்னர்கள் திருப்தர்கள்.

பக்தியும் - பிரபத்தியும் முக்தி தருவதில் ஒப்புமை உடையவைகள்.

பக்தன் இடைவிடாமல் பக்தி செய்தல் அவசியம்.

பிரபன்னன் ஒரு தரம் சரணமடைந்து விட்டாலே போதும்.

பக்தன் முக்தி பெறுவதற்கு மரணத்தின் போது இறைவனை அவசியம் நினைக்க வேண்டும். பிரபன்னனுக்கு இது அவசியமில்லை.

ஸ்ரீ ஆண்டாள் தான் அருளிச் செய்த திருப்பாவையில் கூறியபடி "போயபிழையும் புகுதருவான் நின்றனவும்" என்று குறிப்பிட்டுள்ள உத்தராக வினைகள் இருவகையினரையும் ஒட்டாது!

ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள். தானும், பிறரும் தமக்குத் தஞ்சமல்ல என்ற நிச்சயத்துடன் ஒருவன் ஸ்ரீமந் நாராயணனை சரண்புகுவதே பிரபத்தி அல்லது சரணாகதி தர்மமாகும். இதுவே சாலச்சிறந்தது என்று ஆன்றோர்கள் கருத்து. நம்மாழ்வாரும்,

"அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்
மங்கையுறைமார்பா
நிகரில் புகழாய்! உலகம் மூன்றுடையாய்
என்னையாள்வானே
நிகரில் அமரர் முனிகணங்கள் விரும்பும்
திருவேங்கடத்தானே
புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து
புகுந்தேனே"

PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com



PDF-XCHANGE Click to buy NOW! www.docu-track.com

என்று சரணாகதியின் தத்துவத்தை திருவாய் மொழியில் அருளிச் செய்துள்ளார்.

பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு உபதேசித்தது.

**"ஸர்வத்ர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் - வரஜ - ||**
**அஹம்த்வா சர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாயி மாசுச:- ||**

என்னையே சரணம் பற்று என்று கண்ணன் அருளிச் செய்த பிரபத்தி நெறியை, ஸ்வாமி தேசிகன்,

**"வல்லார் முயல்க வலியிழந்தாரென்றனைத் தொழுகென்**
**றெல்லாத்தரும முரைத்தவன்"**

என்று அருளியுள்ளார். பக்தி நெறி வாய்க்கப் பெற்றோருக்கும் பிரபத்தி நெறி உகந்தது என்பது ஆன்றோர் கருத்து.